**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

அ.வ.எண். 15 /2024 நாள்: 20.08.2025

**வா.சா:– 1 சிவானந்தன் ஆஜர், சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை ( 4 மற்றும் 8ம் பிரதிவாதிகள் தரப்பில்):–**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு இடைநிறுத்தம் செய்துவிட்டேன். 31.12.2022 வரையில் இரயில்வே துறையில் பணி செய்தேன். நான் தனியாக குடியிருக்கிறேன் என்றாலும், 4ம் பிரதிவாதி தனியாக குடியிருக்கிறார் என்றாலும் சரிதான். பூசா கவுண்டர் என்பவர் எனது தகப்பனார் என்றால் சரிதான். பூசா கவுண்டர் மனைவி எனது தாயார் பெயர் நல்லம்மாள். நல்லம்மாள் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி. 2ம் பிரதிவாதி இளையம்மாள் மற்றும் 3ம் பிரதிவாதி தெய்வானை எனது மூத்த சகோதரிகள் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி என்னுடைய அண்ணன். 2ம் பிரதிவாதி இளையம்மாள் இறந்துவிட்டதால் 5 முதல் 7 பிரதிவாதிகள் இந்த தாவாவில் சேர்த்துள்ளேன். 8ம் பிரதிவாதி இளையராணி என்பவர் 4ம் பிரதிவாதியின் மனைவி. தாவா சொத்துக்கள் ஆரம்பத்தில் பூசா கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பூசா கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அவரும் அவருடைய தம்பி சுப்பையன் என்பவரும் 1987ம் ஆண்டு பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினையில் எனது தகப்பனாருக்கு A செட்யூல் சொத்துக்களும், சுப்பையனுக்கு B செட்யூல் சொத்துக்களும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். A செட்யூல் சொத்துக்கள் எனக்கு பஞ்சாயத்து பாககறார்படி எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் இல்லை. பஞ்சாயத்து பாககறார் நடக்கவில்லை. B செட்யூல் சொத்துக்கள் சுப்பையன் சண்முகத்திற்கு கிரையம் கொடுத்தார் என்றால் அவரது மகனும், மற்ற வாரிசுகளும் கொடுத்தார்கள். சண்முகத்திடம் இருந்து மேற்படி சொத்தை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் ஆமாம். பூசா கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் தாவா A செட்யூல் சொத்துக்கள் என்றால் சரிதான். எனது சகோதரருக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 1982 அல்லது 1983ம் வருடம் இருக்கலாம். எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 1984ம் வருடம் நடந்தது. சண்முகத்தின் வாரிசுகளிடமிருந்து எப்போது கிரையம் வாங்கினேன் என்றால்

**Copy of Deposition**

06.02.2007ம் தேதியில் கிரையம் வாங்கினேன். 4ம் பிரதிவாதி திருமணத்தின்போதே வேலையில் இருந்தார் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனாரும் இரயில்வே பணியில் இருந்தார் என்றால் ஆமாம். எனது திருமணத்தின்போது நிரந்தர வேலை எனக்கு இல்லை , இரயில்வேயில் தினக்கூலி வேலை செய்தேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>Sd xxx P. Sridevi<br>Subordinate Judge,<br>Kodumudi |